**அசல் வழக்கு எண். 48/2013 தேதி–02.09.2025**

**வா.சா. 3 – பாலு**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிச்சையம்மாளுக்கு எதிராக வன்னிமுத்து தாக்கல் செய்துள்ளார். தங்கமணி மற்றும் அவரது குழந்தைகள், பிச்சையம்மாள் ஆகியோர் குளித்தலையில் தற்போது உள்ளார்கள் என்றால் சரிதான். முன்பு நங்கவரத்தில் இருந்தார்கள். மேற்படி நபர்கள் குளித்தலைக்கு வந்து சுமார் 35 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். 4 ம் வாதி பிச்சையம்மாள் தான் என்னை சாட்சியம் அளித்து அழைத்து வந்தார் என்றால் சரிதான். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. காத்தானுக்கு எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு அளவுள்ள நிலம் பாத்தியம் என்றால் சர்வே எண்.495/3 ல் ஏக்கர் 1.27 சென்ட் பாத்தியம் ஆகும். மேற்படி நிலம் காத்தான் விலைக்கு வாங்கிய சொத்தா என்றால் இல்லை அவர் குத்தகைக்கு வாங்கிய நிலம் ஆகும். மேற்படி நிலத்தின் உரிமையாளர் யார் என்றால் செட்டி பண்ணையின் நிலம் என்று கூறுவது வழக்கம்.

2. உரிமையாளர் பெயர் தெரியவில்லை. மேற்படி நிலத்திற்கு குத்தகை எவ்வளவு என்றால் வருடத்திற்கு 7 மூட்டை நெல் கொடுப்போம். அதற்கு இரசீது கொடுப்பார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 4 ம் வாதி குத்தகை செலுத்துகிறார்களா என்றால் செலுத்துகிறார்கள். 1 மற்றும் 4 ம் வாதி குத்தகை செலுத்தியிருந்தால் நில உரிமையாளர் அவர்களுக்கும் இரசீது வழங்கியிருப்பார் என்றால் சரிதான். வா.சா.2 எனது தந்தை என்றால் சரிதான். நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி நிலத்தை மூன்றாக பிரித்தாக சொல்வதற்கு ஏதேனும் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்த தேதி மாதத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் 1996 ல் பதிவு செய்யப்பட்டது. மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தின் நகல் எனது தந்தையிடம் உள்ளதா என்றால் இருக்கும் என்று நினைக்கிறேன். எனது தந்தை குத்தகை செலுத்தியதற்கு இரசீது கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். காத்தான் எப்போது இறந்தார் என்றால் நினைவில்லை. 4 ம் வாதியின் கணவர் மாரியப்பன் எப்போது இறந்தார் என்றால் நினைவில்லை.

3. 1 ம் வாதியின் கணவர் இரவி எப்போது இறந்தார் என்றால் நினைவில்லை. எனது தந்தையுடன் பிறந்தவர்கள் 4 சகோதரிகள் என்றால் சரிதான். நான் வீட்டுமனை என்று கூறிய நிலத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் சுமார் 12 சென்ட் ஆகும். மேற்படி வீட்டுமனையானது குத்தகை நிலம் இல்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டுமனை எப்படி காத்தானுக்கு பாத்தியம் என்றால் மேற்படி காத்தானுக்கு அவரின் திருமணத்தின் போது கொடுத்த நிலமாகும். மேற்படி வீட்டுமனைக்கு காத்தானின் பெயரில் பத்திரம் எழுதி வைத்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வீட்டுமனைக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது தந்தை , வன்னிமுத்து மற்றும் 4 ம் வாதியின் கணவர் மாரியப்பன் ஆகியோர் பெயரில் உள்ளது. மேற்படி வீட்டுமனையின் பட்டா எனது தந்தையிடம் உள்ளதா என்றால் உள்ளது. பஞ்சாயத்தார் முன்னிலையில் மூன்று நபர்களும் கையெழுத்து போட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. மூன்று நபர்களுக்கும் பிரித்து பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை வாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால தாக்கல் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். எனக்கும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கும் எவ்வளவு காலமாக விரோதம் என்றால் அவ்வாறு முன்விரோதம் ஏதும் இல்லை. மேற்படி குத்தகை நிலமான ஏக்கர் 1.27 சென்ட் நிலத்திற்கு வடபுறம் மற்றும் தென்புறம் ராஜகோபால் நிலம் உள்ளது. கிழக்கே வாய்க்கால் உள்ளது. மேற்கே கண்ணாறு மற்றும் கண்ணாற்றை ஒட்டி பலரது நிலங்கள் உள்ளது. மேற்படி ராஜகோபாலின் தந்தை பெயர் தெரியாது. குத்தகை நிலம் என்பது மொத்தம் ஏக்கர் 1.18 சென்ட் என்றும், வடபுற பாதியை எனது தந்தையும், தென்புற பாதியை 1ம் பிரதிவாதி வன்னிமுத்துவும் பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து தனிப்பட குத்தகை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

5. மேற்படி வீட்டுமனைக்கு மேற்கே ராஜலிங்கம் , நடேசன் மற்றும் ராமன் ஆகியோர் நிலம் உள்ளது. கிழக்கே பழனியாண்டி நிலம் உள்ளது. மேற்படி வீட்டுமனையில் தெற்கே உள்ள 6 சென்ட்டில் கூரை வீடு இருந்து என்றால் சரிதான். மேற்படி கூரை வீட்டை எடுத்துவீட்டு தெற்கே பார்த்து வன்னிமுத்து ஓட்டு வில்லை வீடு கட்டியுள்ளாரா என்றால் அவரது பாகத்தில் கட்டியுள்ளார். மேற்படி கூரை வீடு பொது வீடாகும். மேற்படி கூரை வீடு தற்போது இல்லை. கூரை வீடு இருந்த இடத்தில் தான் வன்னிமுத்து ஓட்டு வீட்டை கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அதை தள்ளி அவரது பாகத்தில் கட்டியுள்ளார். மேற்படி ஓட்டு வீட்டிற்கு வன்னிமுத்து பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வன்னிமுத்து மேற்படி வீட்டுமனையில் அவரது பாகத்தை பொறுத்து அவரது மகன் பெரியசாமி மற்றும் ஜகநாதனுக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

6. எனது தந்தையின் பாகத்தை பொறுத்த எங்களுக்கு சொத்து எதுவும் ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி வீட்டுமனையில் வடபுறம் 6 சென்ட் எனது தந்தைக்கும், தென்புற பாதி 6 சென்ட் வன்னிமுத்துக்கும் சரிபாதியாக பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1 மற்றும் 4 வாதிகள் எந்த காலத்தில் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், எனக்கும் வன்னிமுத்து குடும்பத்திற்கும் இருந்த முன்விரோதம் காரணமாக வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா
**Additional District Munsif,**
**Kulithalai.**